# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
# நாமக்கல் – 637 001.

## பள்ளிகளின் தேவைகளுக்கான அலைபேசி செயலி உருவாக்கப் பணிமனை

******

பள்ளி நிருவாகம், கற்றல் மற்றும் கற்பித்தலில் உதவக்கூடிய அலைபேசி செயலிகளை உருவாக்குவதற்கான ஒருநாள் தன்னார்வ ஆசிரியர் பயிற்சி 27.12.2024 அன்று நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் கொடுக்கப்பட்டது.

பிரச்சினைகள், இடர்பாடுகள், சவால்கள் உருவாகும்போது அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பிறக்கின்றன. இக்காலக்கட்டத்தில் தகவல் தொழினுட்பம் அனைத்துத் துறைகளிலும் கோலேச்சி வருகிறது. பள்ளி நிருவாகம், கற்பித்தல் செயல்பாடுகள், பாடக்கருத்துக்களைத் தெரிந்துகொள்ளுதல், புரிந்துகொள்ளுதல், வாசித்தல் போன்ற கற்றல் நடவடிக்கைகளில் எழும் சவால்களுக்குத் தீர்வு காண்பது அவசியமான ஒன்றாகும். பள்ளியில் உருவாகும் சிக்கல்களுக்கு எளிதாக தீர்வுகாண்பதற்கு அலைபேசி செயலிகளை உருவாக்கும்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரிய அளவில் பயன்பெறுவார்கள்.

அலைபேசி செயலிகள் உருவாக்கப் பணிமனையை நிறுவன முதல்வர் செல்வம் தொடங்கி வைத்து, பயிற்சியைப் பற்றி குறிப்பிடும்போது கோவிட்-19 காலக்கட்டத்திற்குப் பிறகு மென்திறன் அலைபேசிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், ஆசிரியர்கள் மென்திறன் அலைபேசிகளை அதிகளவு பயன்படுத்துவதாலும், செயலிகள் உருவாக்கம் குறித்து பயிற்சி கொடுக்கும்போது அலைபேசி செயலிகளை உருவாக்குவதற்கான ஆர்வமும், ஊக்கமும் பிறந்து தொழினுட்ப படைப்பாக்கத் திறனும் ஆசிரியர்களிடையே அதிகரிக்கும் என்றும், பள்ளிக்காக அலைபேசி செயலிகள் உருவாக்கம் அதிகரிக்கும்போது ஆசிரியர்களின் வேலை எளிதாகும், வேலைப்பளுக் குறையும் என்றும் கூறினார்.

சேலம், பாகல்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர் அருளானந்தம் அவர்கள் இப்பயிற்சிக்குக் கருத்தாளராகச் செயல்பட்டார். பயிற்சியில் தங்கபுள் (Thunkable), கோடுலர் (Kodular) மென்தளங்களைப் பயன்படுத்தி மிகவும் எளிதாக அலைபேசி செயலிகளை உருவாக்கும் திறனை ஆசிரியர்கள் பெற்றனர்.

நாமக்கல், சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சார்ந்த 17 ஆசிரியர்களும், நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த 5 விரிவுரையாளர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர். இந்நிறுவன விரிவுரையாளர் சிவபெருமான் அவர்கள் பயிற்சி ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். இந்நிறுவன துணை முதல்வர் அமீருன்னிசா பயிற்சிக்கு வாழ்த்துரை வழங்கினார்.